Chief Reporter
Tamil Nadu Legislative Assembly Secretariat
12 OCT 1993
Madras-600 009

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

ஆவணி 24, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 செப்டம்பர் 9, திங்கட்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் முற்பகல் 9–30 மணிக்கு பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

'' விரைந்து தொழில்கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.''

கருத்துக்களை முறையாகத் தொகுத்து இனிமையாகச் சொல்ல வல்லவராக ஒருவர் இருந்தால் உலகம் விரைந்து அவருடைய ஏவலைக் கேட்டு நடக்கும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 6, திரு. தே. ஜனார்தனன், மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள்.

6— தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரித்தல்.

*1231—திரு. தே. ஜனார்தனன்:
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டு மாவட்டங்களாகப் பிரிக்க ஏற்கனவே அறிவிக்கப்பட்ட அரசின் திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசினுடைய ஆய்வில் உள்ளது.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்திலே, மாவட்டங்களை இரண்டாகப் பிரிக்கும்போது, விழுப்புரத்தைத் தலைநகராகக் கொண்ட பகுதிக்கு வள்ளலார் மாவட்டம் என்று பெயர் சூட்டுவதாக அறிவித்தார்கள். அதே பெயரை நமது அரசாங்கமும் அப்படிப் பிரிக்கும்போது சூட்டுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் இதய தெய்வம் எதையெதைக் குறிப்பிட்டார்களோ அதைத்தான் தொடர்ந்து—இன்றைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களும்—அதே வழியில்—நடந்து வருவதால் அதே பெயர் சூட்டப்படும்.

திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அரசுக்கு நிதி நெருக்கடி இருப்பது தெரியும். அடுத்த ஆண்டு மாவட்டத்தைப் பிரிக்கும்போது தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிக்க முன்னுரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி முதலமைச்சர் அவர்களும் அமைச்சரவையும் முடிவு செய்வார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். பி. பரமசிவம்.

திரு. ஆர். பி. பரமசிவம்: பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தென்னாற்காடு மாவட்டம் தமிழகத்திலே தற்போது பெரிய மாவட்டமாக இருக்கிறது. காவல் துறையைப் பொறுத்தவரையில் கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு மாவட்டமாகவும், விழுப்புரத்தை ஒரு மாவட்டமாக பிரித்து செயல்பட்டு வருகிறார்கள். அதேபோன்று ஒரு நிலைமையை அடுத்த ஆண்டாவது ஏற்படுத்தி, எங்களுடைய மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, விழுப்புரத்திற்கு மாண்புமிகு முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். மாவட்டம் என்று பெயர் சூட்டும்படி கேட்க ஆசைப்படுகிறேன். அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய மாவட்டங்கள் இருப்பதை நினைத்துத்தான் புரட்சித் தலைவர் அவர்கள் முதலமைச்சரான பிறகு வரிசையாக ஒவ்வொன்றாகப் பிரித்து வந்தார்கள். முதலில் கோயமுத்தூர் மாவட்டத்தைப் பிரித்து, கோயமுத்தூர் மாவட்டம் என்றும், பெரியார் மாவட்டம் என்றும், அதற்குப் பிறகு இராமநாதபுரம் மாவட்டத்தைப் பிரித்து இராமநாதபுரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 9]

மாவட்டம் என்றும், காமராஜர் மாவட்டம் என்றும், பசும்பொன் தேவர் மாவட்டம் என்றும், அதேபோல மதுரை மாவட்டத்தைப் பிரித்து, மதுரை மாவட்டம் என்றும், அண்ணா மாவட்டம் என்றும், அதேபோல திருநெல்வேலி மாவட்டத்தைப் பிரித்து, திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம் என்றும், சிதம்பரனார் மாவட்டம் என்றும் வரிசையாகப் பிரித்து வந்தார்கள். புரட்சித் தலைவர் வழி வந்த இந்த அரசும் இன்றைக்கு இருக்கிற புரட்சித் தலைவி அவர்களும் அதையே பின்பற்றி ஒவ்வொரு மாவட்டமாகப் பிரிப்பார்கள் என்றாலும் நிதிநிலைக் கேற்றவாறு அது செய்யப்படும். இந்த ஆண்டு தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. புரட்சிமணி.

திரு. ச. புரட்சிமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தை இரண்டாகப் பிரித்துக் கடலூரைத் தலைநகராகக் கொண்ட மாவட்டத்திற்கு அமரர் ராஜீவ் காந்தி மாவட்டம் என்று பெயர் வைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் அரசால் அரசு உத்தரவு (ஜி.ஓ.) பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதைப் பின்பற்றி இருக்கிறோம். அதை மாற்றுவது பற்றிய எந்தப் பதிலையும் இப்போது என்னால் சொல்ல முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ச. சுந்தரராஜ்.

டாக்டர் ச. சுந்தரராஜ்: பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அலுவலர்களை மக்கள் எளிதில் சந்திப்பதற்காகத்தான் மாவட்டங்களைப் பிரிக்கிறார்கள். ஆனால் ஏழெட்டு ஆண்டுகளுக்கு முன்னால் பிரிக்கப்பட்ட மாவட்டங்களில் சிலவற்றில் கூட, அந்த மாவட்ட நிர்வாகங்கள் அந்தந்த மாவட்டத்திற்குள் வருவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை. அவ்வாறு மாவட்டம் பிரிக்கப்பட்ட அந்த நிர்வாகம் அயல் மாவட்டத்தில் இருப்பதால் அந்த மாவட்டத்திற்குள்ளே உடனுக்குடன் அமைவதற்கு அரசு உத்தேசித்துள்ளதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-35)

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே இருந்த அரசுகள்—அதுவும் புரட்சித் தலைவர் ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே பிரிக்கப்பட்ட மாவட்டங்களைப் பற்றி போடப்பட்ட உத்தரவுகளையும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதல் அமைச்சராகிய பிறகு போடப்பட்ட உத்தரவு

களையும் பார்த்தால், புரட்சித் தலைவர் முதலமைச்சராக ஆன பிறகு போடப்பட்ட உத்தரவுகள் ஒருங்கிணைந்து இருக்கின்றன. எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே அரசாணையாக போடப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட எந்த இடங்களில் நடைபெற வில்லை என்று சொன்னால் அரசு உடனடியாக நடவடிக்கையை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, தஞ்சை-கிழக்கு காயிதே மில்லத் மாவட்டம் என்று எப்போது தொடங்க இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது தென்னாற்காடு மாவட்டத்தைப் பிரிப்பது பற்றிய கேள்வி. நீங்கள் பொதுவாகக் கேள்வியைக் கேட்கலாம். அல்லது இந்தத் தென்னாற்காடு மாவட்டத்தைப் பற்றிக் கேட்கலாம். தஞ்சை மாவட்டத்தைப் பற்றிக் கேட்கும்போது...

திரு. ஆர். சிங்காரம்: பதில் தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தயாராக இருக்கிறது என்பது வேறு. இந்த நேரத்தில் கேட்பது சரியல்ல.

அடுத்த வினா எண் 7. திரு. கே. ஏ. மனோகரன். உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

7- ஓசூரில் புதிய குடும்ப அட்டை வழங்குதல்.

* 1186—திரு. கே. ஏ. மனோகரன்:

மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஓசூர் போன்ற புதிய தொழிற்சாலைகள் நிறைந்த பகுதியில் குடும்பக் கார்டுகள் இல்லாமையால் உணவுப் பொருட்கள் கிடைக்காமல் பாதிப்பு ஏற்படுவதைத் தடுக்க புதிய குடும்பக் கார்டுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) புதிய குடும்பக் கார்டுகள் வழங்கப்படும்வரை தற்காலிகமாக உணவுப் பொருட்கள் வழங்க ஏதேனும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: பேரவைத் தலைவர் அவர்களே,